27th September 1958]

Tube wells.

* 569 *Q.*—SRI P. S. SANTHANAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லாவில் எத்தனை குழாய்க் கிணறுகள் உள்ளன ?

(ஆ) அவைகளில் இப்போது எத்தனை நல்ல நிலைமையிலிருக்கின்றன ?

(இ) நல்ல நிலைமையிலில்லாத குழாய்களை மீண்டும் சீர்படுத்த அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ? எடுத்த முயற்சி பலன் கொடுத்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It is presumed that the hon. Member refers to both tubewells and filter point wells. No tubewells have been sunk at Government cost in the district, but 14 tubewells were sunk on private parties' lands. Besides, there are 182 filter point wells sunk by the Agriculture Department on ryots' lands in the district.

(*b*) No complaint has been received from the ryots about non-working of any of the wells.

(*c*) Does not arise.

SRI P. S. SANTHANAM : வேலை செய்யாத குழாய்களை விட்டு, கிணற்றில் கைப்பிடிச் சுவர் அமைத்து, ராட்டணம் அமைத்து உடனடியாக வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தகவல்கள் கனம் அங்கத்தினர் என்னிடம் கொடுத்தால், அது கவனிக்கப்படும்.

SRI T. VELUCHAMI : கோ-ஆபரேடிவ் பார்மை என்கரேஜ் செய்வது இந்த குழாய் கிணறுகளின் நோக்கம். அந்த நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேறியிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பில்டர் பாயிண்ட் கிணறுகள் கோ-ஆபரேடிவ் பண்ணைகளுக்கு என்றாலும், சிறு நிலச் சுவாந்தார்களும் கூட இதை உபயோகித்துக்கொள்ள முடியும்.

SRI P. S. SANTHANAM : திருவண்ணாமலை தாலூக்காவில் குறுலி மலை, கல்லேரி இன்னும் மற்றொரு கிராமம் இவைகளில் கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன. அவைகளில் தண்ணீர் வர........

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குடிதண்ணீரைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். நான் பதிலளித்தது நீர்ப்பாசன வசதிக்கான, ட்யூப் வெல்ஸ், பில்டர் பாயிண்ட் வெல்ஸ் இவைகளைப்பற்றி. மற்றதைப்பற்றி கனம் ரெவின்யூ அமைச்சருக்கு கேள்வி கேட்டால் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

B.T. College, Orathanad

* 570 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஒரத்தநாடு பி.டி. காலேஜில் படித்த பி.டி. மாணவர்களை என்ன வேலைகளுக்கு பயன்படுத்த உத்தேசம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The candidates trained in the college will be absorbed to the extent necessary as school assistants in Government Basic Training Schools and as Deputy